085

போதனை விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்.

LIBRARY OF THE REGISTRAR OF BOOKS
18 FEB 1941
MADRAS

Editor & Publisher:

Rev. Fr. A. LOURDUSWAMI, B.A., L.T.,

R. C. Secondary Training School, Trichinopoly.

15 பெப்ருவரி 1941 மலர் 8

...முறை பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

தனிப்பிரதி அணா 1¼.

JL
2211, N11PP
N41. 31.8
182454

BODHANA VISHAYA POONGOTHU
Magazine
of
Educational Topics & School Methods.

பொருளடக்கம்

பக்கம்

1. பத்திராதிபர் குறிப்புகள் 221
2. சென்னை கல்வி இலாகா திருத்த விதிகளும் சுற்றறிக்கைகளும் 223
3. விநோதப்பிரியம் அல்லது நூதனங்களை ஆராயும் சுபாவ உணர்ச்சி 226
4. தலைமை ஆசிரியர்மீது வாழ்த்து 228
5. அன்பும் ஆசிரியரும் 229
6. பாடக் குறிப்பு 232
7. விடுகவி 234
8. சுகாதாரம் 235
9. சார்ந்த எண் சம்பந்தப்படுத்திக் கணிதம் போதித்தல் 236
10. சிறுவர்களுக்கான கதைகள் 238
11. பதியம்போடுதலும், ஒட்டுவைத்தலும் ... 240
12. யோசனாவிருத்திச் செய்யுளின் விடைகள் ... 242
13. அறுவடை வண்டு சொன்ன கதை 243
14. நம் பாடசாலை நிகழ்ச்சிகள் 246
15. பழைய மாணவர் கொண்டாட்டம் 247
16. பேடன் பௌவல் பிரபு மரணமும் சாரணர் துயரமும் 249

Imprimatur: ✠ JAMES,
Bishop of Trichinopoly.

Rates of Advertisement

PERIOD		HALF PAGE			FULL PAGE		
		Rs.	As.	Ps.	Rs.	As.	Ps.
1 Month	... ...	4	0	0	7	8	0
3 Months	... ...	11	0	0	20	0	0
6 Months	... ...	20	0	0	35	0	0
1 Year (11 Issues)	...	30	0	0	55	0	0

Editor & Publisher :
"BODHANA VISHAYA POONGOTHU" Trichinopoly.

எஜெண்டுகள் தேவை! எஜெண்டுகள் தேவை!!

போதனா விஷயப் பூங்கொத்து

கொத்து **31**] **15** பெப்ருவரி **1941** [மலர் **8**

பத்திராதிபர் குறிப்புகள்

T. S. L. C. பரீட்சை **1941**.—இப்பரீட்சை அடுத்த மார்ச்சு-மீ^{r} 18, 19, 20-ம் தேதிகளில் நடைபெறும். வழக்கம் போல் நமது போதனாமுறைப் பாடசாலை ஸெண்டரில் நமது மாணவர்களும், ஸர்க்கார் போதனாமுறைப் பாடசாலை மாணவர்களும் இருங்களூர் போதனாமுறைப் பாடசாலை மாணவர்களும் (இது இவ்வருஷத்தில் புதிதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.) ஷை பரீட்சை எழுதுவார்கள். ஆனால் ப்ரைவேட் (Private) மாணவர்கள் எல்லோரும் திருச்சி பிஷப் ஹீபர் கலாசாலை ஸெண்டரில் எழுதவேண்டும்.

ஷை பரீட்சை கால அட்டவணையை மற்றோரிடத்திற் காண்க.

* * *

Identification certificate.—முன் வருஷங்களில் T. S. L. C. பரீட்சையில் தவறிப்போன நம் பழைய மாணவர்கள், இவ்வருஷம் வேறு ஸெண்டரில் பரீட்சை எழுதுவதாய் இருந்தால், அவர்கள் இப்பாடசாலையில் பயின்றதாக அத்தாட்சி காட்ட நம்மிடமிருந்து அதாவது இப்பாடசாலைத் தலைமை ஆசிரியரிடமிருந்து அத்தாட்சி பத்திரம் (Identification certificate) பெற்றுக்கொள்ளவேண்டும். ஆகவே தேவையுள்ளோர் ஷை ஸர்ட்டிபிக்கேட்டை உடனே பெற்றுக்கொள்ளுவது

அவசியமாகையால் அதற்குத் தபால் சார்ஜுக்கு (0—1—3) ஸ்டாம்பு அனுப்பி அந்த ஸர்ட்டிபிக்கேட்டை உடனே பெற்றுக்கொள்ள மறக்கவேண்டாம்.

* * *

நம் வாசகர்கட்கு நன்றி பாராட்டு.—நம் “பூங்கொத்து” வாசகர்கள் பலர் பூங்கொத்தில் பிரசுரமாகி வருகின்ற கட்டுரைகளைப்பற்றியும், இப்பத்திரிகை நடத்தப்பட்டுவரும் பான்மையைப்பற்றியும், வெகுவாய்ப் புகழ்ந்தும், பூங்கொத்தின் ப்ரயோஜனத்தை நன்கு மதித்தும், நமக்குப் பல கடிதங்கள் எழுதியுள்ளார்கள். அன்னவர் அனைவர்க்கும் தனித்தனியாக நன்றி கூறக்கூடாமையால், இப்பூங்கொத்து மலரின் மூலமாக எமது மனமார்ந்த நன்றியை எல்லோர்க்கும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அன்றியும், “பூங்கொத்துக்கு” விஷயதானம் புரியும்படிக்கும் கேட்டுக்கொள்ளுகிறோம். விஷயதானம் புரிவோர் தாம் எழுதுவதைத் தெளிவாயும் சுருக்கமாயும் முழுத் தாளில் (Foolscap paper) எழுதி அதை பூங்கொத்து பத்திராதிபருக்கு முன்மாதம் 20-ம் தேதிக்குள் அனுப்பிவிடும்படி கோருகின்றோம். மேலும் நமது பூங்கொத்தின் அபிவிருத்தியையுன்னி புது சந்தாதாரர்களைச் சேர்க்கவும் முற்படுவார்களாக.

* * *

New Admissions.—அடுத்த ஜூலைமாதம் நமது போதனாமுறைப் பாடசாலையில் ஸெக்கண்டரி கிரேடிலும், எலிமெண்டரி கிரேடிலும் சேர்ந்து பயிற்சிபெற விரும்புவோர், எமது விலாசத்திற்கு, அப்ளிகேஷன் பாரம் (Application form) ஒன்றுக்கு 2 அணா வீதம் தபால் ஸ்டாம்பு அனுப்பி தேவையான பாரங்களைப் பெற்றுக்கொள்ளக்கடவர்.

மனுக்கள் (Application) வருகிற மே-மீ 31-ம் தேதிக்குள் நமக்கு வந்து சேர்ந்துவிடவேண்டும். மற்றும் இது விஷயமான தகவல்களைக் கேட்டறிய விரும்புகிறவர்கள் போதுமான தபால் ஸ்டாம்புகள் அனுப்பாவிடில் பதிலளிக்கப்படமாட்டாது.

182457

சென்னை கல்வி இலாகா திருத்த விதிகளும் சுற்றறிக்கைகளும்

Proceedings of the Director of Public Instruction, Madras

(Dis. No. 5778/40. Dated 11—12—1940).

இந்த சுற்றறிக்கையின்படி, ஒரு எயிடெட் பாடசாலை (Aided School) மானேஜருக்கும் அவரிடம் வேலைபார்க்கும் ஆசிரியருக்கும் ஒப்பந்தம் (Agreement) ஏற்பட்டிருக்கையில் வேலையைவிட்டு நீங்குதல் அல்லது நீக்கப்படுதல் விஷயமாய் நோட்டீஸ் ஏற்பட்டால், அந்த நோட்டீஸ் காலத்தைப்பற்றி அரசாங்க சட்ட உத்தியோகஸ்தர் (Government Solicitor) விடுத்துள்ள அபிப்பிராயம் பின் வருமாறு ஆகும்.

ஷை இருதாத்தினரும் ஒருவர்க்கொருவர் சமரசமாய் இருந்தால், வேலையைவிட்டு நீங்கிப்போகும் ஆசிரியர் தாம் வேலை செய்த காலத்திற்குமாத்திரம் சேரவேண்டிய சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு போய்விடலாம். ஆனால் அவ்வாறு ஒத்துப் போகாவிடில், சட்டப்படி நோட்டீஸ்காலம் முழுவதையும் இருதாத்தினரும் வற்புறுத்தலாம்.

அதாவது: மானேஜர் ஆசிரியருக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கையில், அந்த ஆசிரியர் அந்தக்காலம் முழுதும் வேலைபார்க்கும்படி மானேஜர் வற்புறுத்தலாம்.

அப்படி வேலைசெய்யாமல் ஆசிரியர் இடையில் நீங்கிப்போய் விடுவாரானால், நஷ்ட ஈடாக, அவர் நோட்டீஸ்படி வேலைசெய்ய வேண்டிய நாட்களுக்கு எல்லாம் அவருக்கு மானேஜர் சம்பளப் பிடித்தம் செய்யலாம். அவ்வாறே, ஆசிரியரும் அந்த நோட்டீஸ் காலம் முழுவதுக்கும் சம்பளம் வாங்கிக்கொள்ள உரிமையுண்டு. அதாவது இடையில் மானேஜர் அந்த ஆசிரியரை வேலையைவிட்டு நீக்க விரும்பினால், அந்த ஆசிரியருக்கு அந்த நோட்டீஸ்காலம் முழுவதற்கும் சேரவேண்டிய சம்பளத்தைக் கொடுத்துவிட்டு அவரை வெளியே அனுப்பிவிடலாம்.

* * *

Amendment to rules relating to recognition and aid to Elementary schools.

(G. O. Ms. No. 60 Education. Dated 15-1-1941)

22-வது விதிக்குக் கீழ் பின்வரும் விஷயத்தைச் சேர்த்துக் கொள்ளவும் :—

"சாதாரணமாக, பாடசாலை கிராண்டு, மே, ஆகஸ்டு, நவம்பர், பெப்ருவரி ஆகிய இந்த நான்கு மாதங்களில் நான்கு தவணையாக வழங்கப்படும்."

22-வது விதி: (கிராண்டு வழங்குதல்). "ஜில்லா கல்வி அதிகாரியோ, (D. E. O.) அல்லது பெண் பாடசாலைகளானல் இன்ஸ்பெக்டரெஸோ, அந்தந்த ப்ரதேசத்திலுள்ள ஒவ்வொரு பாடசாலைக்கும், அப்பிரதேசத்தில் ஒரே மானேஜ்மெண்டுக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கும், உரிய கிராண்டு கணக்கை (Grant-bill) ஏற்பட்டுள்ள பாரத்தில் தயாரித்து வைக்கவேண்டும்."

அந்தந்த பாடசாலைக்குரிய கிராண்டு, மேலே காட்டியுள்ள படி நான்கு தவணைகளில் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

Training-School Leaving Certificate Examination, March 1941.

Time-Table

The Examination will be conducted in the order of time and subject shown in the subjoined table :—

Secondary Grade

Day and hours. 1941.	Subjects.
Tuesday, 18th March-	
10 a.m. to 1 p.m. ...	Organization and Discipline.
Wednesday, 19th March-	
10 a.m. to 1 p.m. ...	General Principles of Edn.
Thursday, 20th March-	
10 a.m. to 1. p.m. ...	Methods of Teaching Subjects.
2 p.m. to 5 p.m. ...	Drawing and Blackboard Work.

Elementary Grade (Higher)

Tuesday, 18th March-	
10 a.m. to 1 p.m. ...	First Language.
2 p.m. to 4 p.m. ...	Geography.
Wednesday, 19th March-	
10 a.m. to 1. p.m. ...	Elementary Mathematics.
2 p.m. to 4 p.m. ...	Nature Study.

Day and hours. 1941.	Subjects.
Thursday, 20th March-	
10 a.m. to 12 noon ...	Elementary Sociology.
2 p.m. to 4 p.m. ...	History of India, English.
2 p.m. to 3-30 p.m....	Indian Music.

Elementary Grade (Lower)

Tuesday, 18th March-	
10 a.m. to 12 noon ...	Nature Study.
2 p.m. to 4 p.m. ...	Elementary Sociology.
Wednesday, 19th March-	
10 a.m. to 1 p.m. . .	First Language.
2 p.m. to 4 p.m. ...	Geography.
Thursday 20th March-	
10 a.m. to 1 p.m. ...	Elementary Mathematics.

Note :—Arrangements made for the practical examination in Indian Music will be notified in due course.

Extracts from Rules

1. Private candidates and ex-students will produce before the Chief Superintendents of the examination of the centre mentioned in their applications an identification certificate from the Dy. Inspector of Schools, or the Sub-Assistant Inspectress of Girls' Schools concerned, in whose jurisdiction the teacher is employed or resides, or from the Heads of Training Institutions in which they underwent training. If any one fails to produce the above identification certificate, he or she will not be allowed to appear for the examination.

2. Geography, Nature Study and History of India. Candidates must bring to the examination hall in addition to their pen, a pencil, a rubber, coloured crayons, a foot-rule and a pair of compasses.

3. Question papers for the Elementary grade are printed in coloured papers, green for the Higher grade and yellow for the Lower grade. Candidates should see before they begin to answer as to whether they have received the right paper and that their answer papers will not be valued if they answer the wrong paper.

INSTINCT OF CURIOSITY

விநோதப்பிரியம் அல்லது நூதனங்களை ஆராயும் சுபாவ உணர்ச்சி

(A.D.M. பிரகாசம், B.A., L.T.)

குழந்தைகளிடம் காணும் சுபாவ உணர்ச்சிகளில் எல்லாம், பிரபலமாய்க் காணப்படுவது விநோதப்பிரியம் அல்லது நூதனங்களை ஆராயும் சுபாவ உணர்ச்சியே ஆகும். "நூதன ஆராய்ச்சி" என்ற உணர்ச்சி, பிராணிகளிடத்தும் காணப்படுகிறது. ஒரு சிறிய நாய்க்குட்டியை முதல்தடவை நம் வீட்டிற்குள் கொண்டு வந்து விடுவோமானால், அது வாலையாட்டிக்கொண்டு குறிப்பிட்ட நோக்கம் யாதுமின்றி கொஞ்சநேரம், மேலும் கீழும் ஓடும். தாவிக் குதித்து, நம் முகத்தை நக்கவரும். சற்றுநேரத்திற்கப்புறம் அறையினுள் ஓடும். அறையின் ஒவ்வொரு மூலையையும் மூக்கால் முகர்ந்துகொண்டு நிற்கும். அறையினுள் வைக்கப்பட்டிருக்கும் பெட்டிச் சந்துகளுக்கிடையே சென்று முகர்ந்து பார்த்துவிட்டு வரும். பிராணிகளிடம் காணப்படும் இதே சுபாவ உணர்ச்சியை நம் குழந்தைகளிடத்தும் காணலாம்.

காலப்போக்கிற்காக மாலைநேரத்தில், தாய் தன் வீட்டு வெளித் திண்ணையில் உட்கார்ந்திருக்கிறாள். அவளது குழந்தை திண்ணையில் ஊர்ந்துகொண்டிருப்பதைக் கண்காணித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறாள். குழந்தையானது சற்றுநேரமும் சும்மாயிராமல் அங்குமிங்கும் தவழ்ந்து செல்லுகின்றது. சிலசமயங்களில் திண்ணையின் விளிம்பிற்குப் பக்கமாயும் வந்து விழுந்துவிடும் நிலையிலிருக்கிறது. இதைப் பார்த்துக்கொண்டிருக்கும் தாய் பரபரப்புடன் ஓடிவந்து தன் குழந்தையைத் தூக்கியெடுத்துத் திண்ணையின், மேல்பாகத்தில் விடுகின்றாள். குழந்தை மறுபடியும் ஊர்ந்துசென்று திண்ணையில் ஒருபக்கத்தில் வைக்கப்பட்டிருக்கும் சைக்கிளைப் பிடித்து இழுக்கின்றது. சைக்கிளின் பெடலைப் பிடித்துக்கொண்டு கொஞ்சநேரம் உற்றுநோக்குகிறது. பிறகு தன் கையால் அதை அடிக்கிறது. தன் வாயால் நக்கிப் பார்க்க முயற்சிக்கிறது. சைக்கிளைப் புரட்டிவிடவும் பார்க்கிறது. குழந்தையானது திண்ணையின் ஒவ்வொரு மூலையண்டையும் தவழ்ந்துசென்று அங்கிருக்கும் பொருள்களைப் பார்க்கும் குணமும், சைக்கிளின் பெடலையும், சக்கரத்தையும் சங்கிலியையும் தொட்டு உற்றுப் பார்க்கும் குணமும், பூகோள சாஸ்திர சம்பந்தமாய் ஆராய்ச்சியாளர்கள் இருண்ட கண்டமான ஆப்ரிக்காவி

னுள் சென்று பூகோள சம்பந்தமான விஷயங்களை அறிய முயற்சித்த தன்மையையே ஒத்திருக்கிறது.

சிறுவர்களுக்கென்று, கடைகளில் செய்து விற்கப்படும் பொம்மை, மோட்டார்சைக்கிள், ஆகாயக்கப்பல், ஊதுங்கருவி, முதலியவைகளை, குழந்தை பார்த்துவிடுமேயாகில் அதை வாங்கிக் கொடுக்கும்வரை, குழந்தை நம்மைச் சும்மாவிடாது. ஸ்டான்லி என்றவன் மூன்று வயதுக் குழந்தை. கடைவீதி வழியாய்ச் செல்லும்போது, கடைகளில் தொங்கிக்கொண்டிருந்த விளையாட்டுக் கருவியான "சிறிய மோட்டார் வண்டி" யைப் பார்த்துவிட்டான். அவன், தன் தகப்பனைத் தொந்தரவு செய்து அந்த விளையாட்டுக் கருவியை வாங்கிக்கொண்டான். வீட்டிற்கு வந்ததும், தன் பகல் போஜனத்தையும் கவனியாது, அந்த விளையாட்டுக் கருவியைத் தள்ளியும் இழுத்தும் விளையாடினான். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு, விளையாட்டுக் கருவியினுள்ள "ஸ்குரு" ஆணிகளைக் கழற்ற ஆரம்பித்தான். சற்று நேரத்திற்குள் மோட்டாரின் ஒவ்வொரு பாகத்தையும் அக்கக்காகப் பிரித்துவிட்டான். ஸ்டான்லி பையன் ஏன் இம்மாதிரி செய்தான்? தன் தகப்பனுக்கு நஷ்டம் ஏற்படுத்தவேண்டுமென்று? இல்லை. அவனது சுபாவ உணர்ச்சியாகிய "நூதன ஆராய்ச்சி" அல்லது "விநோதப் பிரியம்" என்ற சுபாவ உணர்ச்சியால்தான் இம்மாதிரி செய்தான். ஸ்டான்லி இப்படிச் செய்துவிட்டானே யென்று, நாம் மறுமுறை, விளையாட்டுக் கருவிகளை வாங்கிக் கொடுக்காமலிருந்துவிடக்கூடாது. ஏனெனில் இந்நூதன ஆராய்ச்சித் தன்மையே அறிவு வளர்ச்சிக்கு ஆஸ்பதம்.

"ட்யூபி" (Dewey) என்ற மனோ சாஸ்திரி இந்த நூதன ஆராய்ச்சித் தன்மையை, வஸ்து சம்பந்தப்பட்ட நூதன ஆராய்ச்சி என்றும், சமூக சம்பந்தமான நூதன ஆராய்ச்சியென்றும், அறிவு சம்பந்தமான நூதன ஆராய்ச்சியென்றும், மூன்று வகையாய்ப் பிரித்திருக்கிறார். பொருள்களைத் தொட்டுப் பார்த்தலும், வாயில் வைத்துக்கொள்தலும், புரட்டிப் பார்த்தலும், கீழே தள்ளுதலும், ஆகிய இத்தொழில்களைக் குழந்தைகள் செய்யும்போது பொருள்களைப்பற்றிய "அறிவு" ஏற்படுகின்றது. இதைத்தான் வஸ்து சம்பந்தமான நூதன ஆராய்ச்சியென்கிறோம். தள்ளுதல், பிடித்தல், இழுத்தல், முகருதல் முதலிய செய்கைகளின் பலனைக் கேட்கும் கேள்விகள் "ஏன்," "எப்படி" "என்ன" என்பவைகளாகும். தான் பார்க்கும் பொருள்களைப்பற்றிய, அதிக விஷயங்களை, தன்னைச் சுற்றி

யுள்ளவர்களைக் கேட்டால் தெரிந்துகொள்ளலாம் என்று குழந்தை அறிகிறது. இதற்குத்தான் "சமூக சம்பந்தமான நூதன ஆராய்ச்சி" என்று பெயர். நுணுநுணுக்கமாய் ஒரு பொருளைக் கவனிக்கும்போது, சில பிரச்னங்கள் மனதில் தோன்றுகின்றன. இப்படியேற்படும் பிரச்னங்களை, மற்றவர் உதவியின்றி, தன் மூளையை உபயோகித்து, குழந்தை நிவர்த்தித்துக்கொள்கிறது. (Problems solved not by asking others but by cogitation). இதற்குத்தான் "அறிவு சம்பந்தமான நூதன ஆராய்ச்சி" என்று பெயர்.

"நூதன ஆராய்ச்சி" சுபாவ உணர்ச்சியைப்பற்றி ஆசிரியர் கவனிக்கவேண்டிய விஷயங்கள் சிலவுள. எல்லாவிதமான தத்துவ சாஸ்திரங்களும் "விநோதப்பிரியம்" என்றதில் இருந்துதான் தொடங்குகிறது என்று **ப்ளேட்டோ**, என்ற கிரேக்க தத்துவ சாஸ்திரி சொல்லுகிறார். நூதன ஆராய்ச்சிக் குணம் பிள்ளைகளிடத்திலிருந்து மறைந்துபோகாமலிருக்கும்படி, தக்க முறைகளை ஆசிரியர் அனுசரித்தல்வேண்டும். கவலையீனம், பிடிவாதம், தன்னயம், வீண்பேச்சு, முதலியவை நூதன ஆராய்ச்சி மறைவடைவதற்கான சில ஏதுக்களானபடியால், ஆசிரியர் தன்னிடமுள்ள குழந்தைகள் மேற்சொன்ன கெட்ட வழக்கங்களைக் கற்றுக் கொள்ளாமலிருக்கப் பார்த்துக்கொள்ளவேண்டும். மிகவும் பிரியமான பாடங்களைத் தெரிந்தெடுத்து, குழந்தை அதில் மனதைச் செலுத்தும்படிச் செய்து, "நூதன ஆராய்ச்சி" என்ற சுபாவ உணர்ச்சியை ஆசிரியர் வளர்க்கவேண்டும்.

தலைமை ஆசிரியர்மீது வாழ்த்து

(A. Antoni, *Holy Redeemer's, Trichy.*)

= சங்கைக்குரிய =

லூர்து சுவாமியே! உமது பரலோக பாதுகாவலியான **லூ**ர்து அன்னையின் திருநாளாம் இன்று (11–2–'41) அத்தாயார் துணையாயிருந்து உமக்கு யாவற்றிலும் உதவிபுரிந்து சுகமான தேகமீந்து சீரிய தலைமை ஆசிரியர் ஆக மாசுவாய்ந்திடா மாமரியின் மைந்தனார் ஏசுநாதர் சுவாமி கிருபை புரிய பணிந்து வேண்டுகிறேன் யானே மி-
-க ஆவலாய்த்தானே.

அன்பும், ஆசிரியரும்

(M. A. S.)

" அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு" என்றார் வள்ளுவர். அன்பினாலேயே உலகம் நடைபெறுகின்றது. அவ்வன்பு குறையுமேல் "காமக் குரோத லோப மத மாற்சரியம்" என்னும் அறு பகையும் தோன்றுகின்றன. தோன்றவே உலகில் உள்ள மக்கள் இழி தொழில் பல செய்கின்றனர். அத்தொழிலின் பயனாய் உலகும் இழிநிலையடைகின்றது. ஒருவர் எத்தொழிலைச் செய்ய முற்பட்டாலும் அது அன்போடு பொருந்தியதாக இருக்குமேல் இடையூறு இன்றி இனிதாய் முடிதலைக் காண்கின்றோம். இதுபற்றியே,

" அன்புற்றமர்ந்த வழக்கென்ப வாருயிர்க்கு
இன்புற்றார் எய்தும் சிறப்பு" என்று கூறினர் வள்ளுவர். மேலும் இறைவன் வடிவும் செயலும் அன்புமயமாகவேயுள்ளன வென்பது கருதியே "அன்புருவாயினன்" என்றும், "அன்பாலுலகமைத்தான்" என்றும் கூறியிருக்கின்றனர்.

பொதுநோக்காகப் பார்க்குமிடத்து அன்பில்லாத உயிர்ப் பொருளே உலகத்தில் ஒன்றுமில்லையென்பது தெளிவாகும். பிற உயிர்களைக் கொன்று தின்னுதலையே தொழிலாக உடைய கொடுவிலங்குகளும், தம் குட்டி முதலியவற்றினிடம் காட்டும் அன்பு அளவிட்டுரைத்தல் இயலுமா? அறியவேண்டுவன யாவும் குறைவறவறிந்து அதமகுணமிக்கப்பெற்ற கொடுங்கோலரும், உலகெலாம் அடக்கியாளவேண்டுமென்று விரும்பி அதற்கேற்றன செய்யும்போதும் சிலரிடத்து அன்பு காட்டியே தீருகின்றனர். உலகங் காத்தற்குரிய அருளுடைமையும் அன்பினால் பெறப்பட்ட குழந்தையென்றே கூறப்படுகின்றது. முடிவாகச் சொல்லுமிடத்து அன்பு இன்றேல், ஒன்றுமில்லையென்றே கூறிவிடலாம். இத்தகைய பெருஞ் சிறப்புற்ற அன்புடைமை ஆசிரியர்கட்கு எவ்வளவு இன்றியமையாதது என்பதை ஆராய்வதே நம் நோக்கமாகும். ஒரு நாடு சிறப்படையவேண்டுமாயின், அந்நாட்டிற் கல்வியும் கைத்தொழிலும் மிக வேண்டும். உலக நிகழ்ச்சிக்குக் கைத்தொழில் எவ்வளவு இன்றியமையாச் சிறப்புடையதாயினும், அக்கைத்தொழிலும் கல்வியின் உதவியின்றேல் சிறப்படையாது. கல்வியில்லாதாரும் கைத்தொழிலில் நிபுணத்துவம் பெற்றிருத்தலைக் காண்கிறோம். எனின், ஒருவகைப் பழக்க

வழக்கத்தினுல் அவர்கள் சில கைத்தொழிலிற் சிறப்புறினும் பொதுவகையில் இடருறுதலேயே காண்கின்ருேம். மேலும் அவர்களும் தம் தேயத்தன்றிப் பிறதேயங்களில் நிகழும் கைத்தொழில் முறைகளேயும் அவற்றின் பயன்களேயும் பிறருதவியின்றித் தாங்களே நூல்வாயிலாகவோ, அன்றிப் புதினத்தாள்களின் வாயிலாகவோ அறிந்து பயன்படுத்த அறியாது திகைப்புறுகின்றனர். அன்றியும் தம் கைத்தொழிலாலுண்டாய பொருள்கள் எவ்வெத்தேசங்களுக்கு மிகவுந் தேவையாவன, எவ்வெத்தேயங்களில் எவ்வெப்பொருள்கள் மிக வேண்டப்படுகின்றன, அவற்றிற்கேற்பத் தம் தொழிலே எவ்வெவ்வாறு மாற்றிக்கொள்ளுதல் வேண்டும் என்பனபோன்ற வகையறியாது மயங்குகின்றனர். இனி—

கைத்தொழிலேவிட்டு ஜீவாதாரத் தொழில்களாய விவசாயம், வாணிபம்போன்ற தொழில்களே எடுத்துக்கொள்ளினும் கல்வியின்றி ஒன்றும் இயலாது. கொள்வகை விற்றல்வகைகளும், அளவைகளும், மதிப்பும், முதலாயவற்றை அறியவும், காலவேறுபாடுகட்கேற்பப் பயிர்வகைகளே மாற்றவும், எருவகைகளே உபயோகிக்கவும் கல்வி எத்துணே அவசியமாகின்றதென்பது சொல்லாது விளங்கும். இத்தகைய சிறப்புடைக் கல்வியைக் கற்போரைவிடக் கற்பிப்போர் எவ்வளவு நேர்மையும், உதாரகுணமும், முயற்சியும், முற்றறிவுடைமையும், பொறுமையும், பொருமையின்மையும், வேறெவ்விதத் தீச்சார்புகளின்மையும், போதனு சக்தியும் உடையராயிருத்தல்வேண்டும். மேற்கூறிய தீக்குணமகன்று நற்குணமுடையராய் இருப்பினும் அவரிடத்துத் தெய்வ வழிபாடும், அன்பும், அருளும் இருத்தல் அவசியத்தினும் அவசியமன்ருே? அன்பு என்பது ஒன்று இல்லேயாயின், அருள் தோன்ருது, அருளில்லேயாயின் தெய்வவழிபாடு சிறப்புருது. தெய்வ வழிபாடின்றேல், செய்தொழில் வீண். அது தன்னளவிற்றீமை பயத்தலேயன்றித் தன்னேச் சேர்ந்தவரையும் இழிநிலேக்குள்ளாக்கும். பின்னும், அன்பின்றேல் போதனேயில் உவகை தோன்ருது. உவகையின்றேல் சிறப்புறு பொருளே ஆய்ந்து மாணவர் மனத்துட் பொருந்த உரைக்கும் வன்மைமின்ருகும்; அவ்வன்மையின்றேல் ஆசிரியத்தன்மை பாழ்படும். அன்பில்லாத ஆசிரியர்பால் மாணவர் உள்ளுற உவகையுருர். உவகை நீங்குதலேயன்றி வெறுப்பும் அடைவர். அவ்வெறுப்பு காரணமாய் ஆசிரியர் போதிக்கும் போதனேயில் கவனம் செல்லாது. கவனமொழியவே பயன்பெருது கழிவர். எனவே அம்மாணவரே

அன்றி அவரைச் சார்ந்தோரும், ஊரும் நாடும் தேயமும் முன்னேற்றமுறுதலேயன்றி இழிநிலையடைவனவாம்.

இன்னோரன்ன ஆராய்ச்சியால், ஆசிரியனும் உழவன் மாணவராம் புலங்களை அறிவென்னுங் கலப்பையால் உழுது, நல்லொழுக்கம் என்னும் எருவையிட்டுக் கல்வியென்னும் விதையை விதைத்து அன்பு என்னும் நீரைப் பாய்ச்சிப் பொய்மை புறங்கூறல் முதலிய தீக்குணமென்னும் களைகளையகற்றி மறதியென்னும் பட்டிமாடு கல்விப்பயிரை அழித்துவிடாதவாறு ஊக்கம் என்னும் வேலியால் காத்து, அருள் என்ற மழையைப் பொழிந்து, ஞானம் என்னும் ஒண்பொருளை விளைத்து மனமென்னுங் குதிரிற் சேர்த்து வேண்டியார் வேண்டியபோது எடுத்து உபயோகிக்குமாறு செய்து இன்புறுவார்களாக.

சத்திய போதினி

ஒரு உயர்தர மாதாந்தர தமிழ் சஞ்சிகை

மாதிரி பிரதி இனாம்

நானாவித விஷயங்கள்: தற்கால அரசியல் நிலை, வேத விஷயங்கள், சிறு கதைத் திரட்டுகள், உலக நவீனங்கள், சுகாதாரப் பகுதி, மாதர் பகுதி முதலியன அடங்கிய ஒரு மாத சஞ்சிகை.

சந்தா விவரம்

உள் நாடு	... ரூ.	1—0—0
வெளி நாடு	... ரூ.	1—6—0

விலாசம்:

சூப்பரின்டேண்டு,
சேயின்ட் ஜோசப்ஸ் இண்டஸ்டிரியல் ஸ்கூல் பிரஸ்,
திருச்சினாப்பள்ளி.

பாடக் குறிப்பு

(R. Pitchai Pillai.)

வகுப்பு : IV. **பாடம் :** அரசியல் முறை.

நேரம் : 35 நிமிஷம். **நோக்கம் :** தபால் மூலமாய்க் கடிதப் போக்குவருத்து நடைபெறுவது.

உபகரணம் : மாதிரி தபால் கார்டுகள், கவர்கள், ரிஜிஸ்டர் கவர்கள் (உபயோகம்பண்ணுதவை, உபயோகம்பண்ணியவை).

பீடிகை : அருகிலுள்ளவர்களோடு நேர்முகமாகப் பேசுவதன்மூலமாயும், தூரத்திலுள்ளவர்களோடு ஆட்கள் மூலமாகவும் கடிதங்களின் மூலமாகவும் சமாச்சாரங்களை அறிவிப்பதும், தெரிந்துகொள்வதும்பற்றி மாணவர்களோடு சம்பாஷித்தல். இறுதியில் " சமாச்சாரங்களை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துவதற்கென்றும், மற்றவர்களிடமிருந்து சமாச்சாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கென்றும் கடிதப் போக்குவருத்து சார்பாக சர்க்கார் செய்துள்ள ஏற்பாடுகளைப்பற்றி இன்று படிப்போம் " என்பதாக நோக்கத்தை வெளியிட்டுப் பாடத்தை ஆரம்பிக்கவும்.

விஷயம்	முறை
தபால் கார்டு (Post card), தபால் கவர் (Postal cover). கார்டில் விலாசதாரருக்கு அறிவிக்க வேண்டிய செய்தியை ஒரு பக்கமும், மேல்விலாசத்தைக் குறித்திருக்கும் மற்றொரு பக்கமும் எழுதியனுப்பலாம். விலாசதாரருக்கு அறிவிக்கவேண்டிய செய்தி அதிகமானலும், அவ்விஷயம் அவர் ஒருவருக்குமட்டும் தெரியவேண்டுமென்க் கருதினலும் தபால் கவர்களை உபயோகிக்கலாம். மேல்விலாசம் கவரின் மேல்புறம் எழுதப்படவேண்டும்.	மாதிரி தபால் கார்டுகளையும், தபால் கவர்களையும் பிள்ளைகளுக்குக் காண்பித்து விளக்குதல்.

விஷயம்	முறை
தபால் சார்ஜ்: தபால் கார்டின் விலை 9 பைசா. தபால் பில்லை பதிந்துள்ள கவரின் விலை 1 அணா 3 பை. தபால் கவர்கள் விலாசதாரரிடம் போய்ச்சேருவதை ஊர்ஜிதப்படுத்துவதற்கென்று அவைகளை "ரிஜிஸ்டர்" செய்துகொள்ளலாம். இதற்காகத் தனிப்பட்ட கவர் உண்டு. ரிஜிஸ்டர் கவரின் விலை அணா 4 பை. 6. இதை ரிஜிஸ்டர் செய்வதற்கான கட்டணம் அணா 3 மேற்படி கிரயத்தில் அடங்கியிருக்கிறது. கார்டுகளையும் கவர்களையும் தபால் ஆபீஸ்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.	மாதிரி தபால் கார்டுகளையும், தபால் கவர்களையும், ரிஜிஸ்டர் கவர்களையும் காண்பித்து அவைகளில் பதிந்துள்ள தபால் பில்லைகளைப் பார்த்துப் படிக்கச் செய்து விளக்கவும். கவர்களை ரிஜிஸ்டர் செய்யும்போது ரிஜிஸ்டர் கட்டணத்துக்காக ரசீது கொடுப்பதை, ஒரு மாதிரி ரசீதைக் காண்பித்து விளக்கிக்காண்பிக்கவும்.
தபால் செல்லும் விதம்: கார்டுகளையும், கவர்களையும் தபால்பெட்டிகளில் போடவேண்டும். போடப்பட்ட காகிதங்களை போஸ்டாபீஸ் அதிகாரிகள் சேகரித்து, முத்திரையடித்து, பைகளில் போட்டு சீல் செய்து ரெயில்வே ஸ்டேஷனுக்கு அனுப்புவார்கள். ரெயில்வே தபால் வண்டியிலுள்ள தபால் உத்தியோகஸ்தர்கள் (R. M. S.) பைகளைத் திறந்து, விலாசப்படி பிரித்து, அவையவை போய்ச்சேரவேண்டிய இடங்களுக்கு அனுப்பிவிடுவார்கள். ஆங்காங்குள்ள தபால் ஆபீஸ் அதிகாரிகள், காயிதங்களை விலாசதாரர்களுக்குத் தபால்காரர்களின் மூலம் சேர்த்துவிடுவர்.	தபாலாபீசுகளில் முதலில் முத்திரை போடுவதைப்பற்றியும், R. M. S. தபால் வண்டியில் தபால் உத்தியோகஸ்தர் செய்யும் வேலைகளைப்பற்றியும், சம்பாஷித்து விளக்குதல். அந்தந்த ஊர்களில் வந்த தபால்களை திரும்பவும் முத்திரையிட்டு (தேதி, இடம்) விலாசதாரருக்குத் தபால்காரர் மூலமாய் அனுப்புவதைப்பற்றிப் பிரஸ்தாபிக்கவும். முத்திரை குத்திய கார்டு, கவர்களைக் காண்பிக்கவும்.

பரீக்ஷைக் கேள்விகள்

1. தபால் கவர்களை உபயோகிப்பதற்கு 2 காரணங்கள் யாவை?

2. ஒரு கவரை ரிஜிஸ்டர் செய்யவேண்டி ஏற்படக்கூடிய தபால் செலவை விவரமாய்க் கூறு.

3. R. M. S. தபால் உத்தியோகஸ்தர்கள் எதற்காக ஏற்பட்டுள்ளனர்?

4. ஒரு கார்டு அல்லது கவரில் காணப்படும் தபாலாபீஸ் முத்திரைகள் குறைந்தபக்ஷம் எத்தனை இருக்கவேண்டும். இவைகளிலிருந்து நீ என்ன அறிந்துகொள்வாய்?

க. ப. சு.

1. தபால் கடிதங்கள் இரண்டுவகைப்படும். தபால் கார்டுகள், தபால் கவர்கள்.

2. சில கவர்களை ரிஜிஸ்டர் செய்வதுமுண்டு. அவைகளுக்கு ரிஜிஸ்டர் கவர்கள் எனப் பெயர். கார்டு விலை 9 பைசா. சாதாரண கவர் விலை அணு 1 பை. 3. ரிஜிஸ்டர் கவர்கள் சிறியது 4 அணு 9 பை. பெரியது 5 அணு 9 பை. (ரிஜிஸ்டர் கட்டணம் 3 அணு உள்பட).

3. தபாலாபீஸ் அதிகாரிகள் கடிதங்களில் முத்திரையிட்டு R. M. S. தபாலதிகாரிகள் வசம் ஒப்புவிப்பர். R. M. S. தபாலதிகாரிகள் விலாசவாரியாகப் பிரித்துக் கடிதங்களை சேரவேண்டிய இடங்களுக்கு அனுப்புவர். ஆங்காங்குள்ள தபாலதிகாரிகள் திரும்ப ஒரு முறை முத்திரையிட்டு விலாசதாரரிடம் சேர்ப்பர்.

விடுகவி

(S. Raja Adaikalam, *H. 1. B.*)

1. வருகிறீர் போகுரீர் என்னுலே
வந்திருக்கிறுர் மேலாளே
செத்துக்கிடக்கிறேன் உன்னுலே
சாகப்போகிறீர் என்னுலே. அது என்ன?

2. நெடுநெடு வென்று வளர்வார் அன்னுர்
நெற்றியில் தொண்ணூரும் பூசுவார் அன்னுர்
கழுத்திலே உத்திராக்ஷம் வைத்திருப்பார் அன்னுர்
கமுக்கத்திலே கொப்பரை வைத்திருப்பார் அன்னுர்.
அது என்ன?

சுகாதாரம்

M. Govindasami *alias* Susai Arpudam, *Higher Grade.*

கண்டு கண்டு தேறினவர்களனேகருண்டு
காணுமற் தேறினவர்களனேகருண்டு
தொண்டுசெய்து பெற்றவர்களனேகருண்டு
தொல்லையென்று விட்டவர்களனேகருண்டு
பண்டுதொட்டு வினைகள் வந்து வாய்க்குமாகில்
பலிக்குமையா வித்தையாவும்
பாரினிலே அறைந்திட்டேன் அற்புதம்.

மானிட ஜென்மம் எடுத்தோர் இம்மையில் அநேக கஷ்டங்களை அடைந்துவருவதும் அடையப்போகிறதும் சகஜம். ஆகையால் நாம் இம்மையில் அடைகின்ற கஷ்டங்களில் சரீர வியாதி ஒன்று. இக்கொடிய வியாதிகளை அடியோடு நிவர்த்திக்கப் பல முறைகள் உண்டு. பல முறைகள் இருக்க அவைகளில் மூலிகை முறை ஒன்று. அதைச் சற்று ஆராய்வோமாக:—

கண்ணேவுக்கு ஓர் சிகிச்சை முறை: தேற்றுங்கொட்டை விதை; புளியங்கொட்டை மேல்தோல்; சீரகம்; கிராம்பு; அமிர்தப்பால்.

அளவு:—தேற்று விதை இரண்டு; புளியங்கொட்டை மேல் தோல் பாக்களவு; கிராம்பு ஐந்து.

முறை:—மேலே கண்டவைகளைச் சேகரம் செய்துகொண்டு வந்து சுத்தமான கல்வத்தில் சீரகம், கிராம்பு, தேற்றுவிதை, புளியங்கொட்டை மேல்தோல் இந்த நான்கையும் பொட்டுப் போல் நுணுக்கி ஒரு சுத்தமான வெள்ளைத் துணியில் வைத்து கிளிக் கட்டிக்கொண்டு அமிர்தப்பாலை ஒரு சிப்பியில் வாங்கி கிளிக்கட்டிய பொட்டலத்தைப் பாலில் ஊறவைத்து, காலை மாலை இருவேளைகளிலும் கண்ணில் பிழியவும். கண்வலி, ரத்தக்கொடி, கண்முளை, மங்கலான பார்வை, கண்சூடு, கறிமாலை, கண்வெள்ளை, இவை யாவும் தீரும். (நாள்பட்ட வெள்ளை தீராது).

வியாதியுள்ளவர்கள் அனுசரிக்கவேண்டிய ஒழுங்குகள்.

1. உஷ்ணமான நேரத்தில் பிரயாணம் செய்யக்கூடாது.
2. அடுப்பு வேலை செய்யக்கூடாது.
3. கடினமான வேலை செய்யக்கூடாது.
4. புஸ்தகங்களைப் பார்க்கக்கூடாது.
5. சினிமாப் படம் பார்க்கக்கூடாது.
6. கடின பதார்த்தங்களைச் சாப்பிடக்கூடாது.

18245

Concrete Teaching of Arithmetic

சார்ந்த எண் சம்பந்தப்படுத்திக் கணிதம்போதித்தல்

(A. Antonimuthu)

கணிதம் தனி எண் (abstract) சம்பந்தப்பட்டிருப்பதால் அதனைப் படிப்பதும் படிப்பிப்பதும் அநேகருக்குக் கஷ்டமானதோர் செயலாக இருக்கின்றது. என்றாலும் சரியாய் ஆராய்வோமாயின் எந்தக் கணித விஷயத்தையும் சார்ந்த எண் (concrete) ஆக்கிக்கொள்ளலாம் என்பது தெளிவாகும். அப்போது கணிதம் கற்பதிலும் கற்பிப்பதிலும் யாதொரு சங்கடமும் ஏற்படாது. ஆகையால் "சார்ந்த எண் சம்பந்தப்படுத்திக் கணிதம் போதித்தல்" என்ற விஷயத்தைப்பற்றி ஆராய்வது ஈண்டு கவனிக்கத்தகும். இதனைப்பற்றிய ஆராய்ச்சிகளை எடுத்துரைக்குங்கால், அடியிற்காட்டிய நான்கு படிகளையும் அனுசரிப்பது விரும்பத்தக்கதாகும். (1) சார்ந்த எண்ணின் தாத்பரியம். (2) சார்ந்த எண் சம்பந்தப்படுத்திப் போதிப்பதின் அவசியம். (3) சார்ந்த எண்ணின் தன்மையும் வகையும். (4) சார்ந்த எண் சம்பந்தப்பட்ட போதனை மார்க்கம்.

சார்ந்த எண்ணின் தாத்பரியம்: கணிதம் சில எண் பெயர்களையும் எண் குறிகளையும் ஒருங்கே அமைத்து ஆக்கப்பட்ட ஒரு சாஸ்திரமாகவும், (science) ஒரு வித்தையாகவும் (art) இருக்கின்றது. அஸ்திவாரமாக பத்து எண் குறிகளும், பதினான்கு எண் பெயர்களும் சம்பந்தப்பட்டு உண்டாக்கப்பட்டது கணிதம் எனலாம். சகல எண்களும் பொருள்களிடத்தில் நேராக தொடர்புபட்டிருக்கின்றன. பொருள்களின் எண்ணிக்கையைக் குறிக்கும் இலக்ஷணமே எண் ஆகிறது. ஆனால் இந்த இலக்ஷணத்தைப் பொருள்களிடத்திலிருந்து தனியாகப் பிரிக்க முடியாது. அது பொருள்களிடத்தே புதைந்திருக்கிறது எனலாம். ஏனெனில் எண் குறிகளைப் பொருள்களோடு சம்பந்தப்படுத்தினாலொழிய அவை அர்த்தசாரப்படா. எண் குறிகளை ஒழுங்குடன் பொருள்களோடு சம்பந்தப்படுத்தவேண்டும் அல்லது அவற்றைச் சரியாய் நிதானித்து உபயோகிக்கவேண்டும். அவை எவற்றைக் குறிக்கின்றன என்பதைத் தெளிவாய் விளக்கிக் காட்டி, தனி எண்களை அர்த்தப்படுத்தவேண்டும். பொருள்

களை உபயோகிக்கும்போது மனோதத்துவங்களைக் கிளப்பி சரியாய்ப் ப்பிற்சிக்கவேண்டும். அம்மாதிரியான செயலிலிருந்து தனி எண்ணை அர்த்தப்படுத்திவிடவேண்டும். மனச்செயலானது எண்ணறிவைப் பெற்றுக்கொள்வதற்காக பொருள்களை உபயோகிப்பதில் அடங்கியிருக்கவேண்டுவதுடன், சுபாவமாகவும் தத்துவக்கொள்கைகளையனுசரித்துக் கணிதத்தைச்சார்ந்த எண் சம்பந்தப்படுத்திப் போதிப்பதற்கு அவசியமாகவும் இருக்கவேண்டும். எண் பொருள்களுக்குச் சொந்தமான இலக்ஷணமல்ல. ஆனால் அவற்றை ஒரு காரியத்தினிமித்தம் சரியாய் பிரயோகப்படுத்துவதிலிருந்து எண் உதிக்கின்றது. அவற்றை ஒழுங்குபட அடுக்கியும் அதாவது மனதில் ஏற்படக்கூடிய கிரியாம்சத்தின் ஆக்கத்தினலும் எண்ணறிவைச் சாதாரணமாக ஏற்படுத்துவதுடன் எண் சம்பந்தப்பட்ட கிரிகைகளிலும் பூரண அறிவு உண்டாக்கலாம். ஆகையால் எண் அறிவு உண்டாகவேண்டின், பொருள்களை மன ஆக்கம் தரும் விதத்தில் பிரயோகிக்கவேண்டும்.

மேலும் எண் புலன் உணர்ச்சியினால் ஏற்படக்கூடிய இலக்ஷணமல்ல. பகுத்தறிச் செயலால் ஏற்படக்கூடிய தத்துவமாகும். புலன்களின் பிரயோகத்தால் மாத்திரம் அடையக்கூடிய பொருள்களின் குணம் எண் ஆகாது. அவற்றின் தனி இந்திரிய ஞானங்கூட (perception) எண்ணை உண்டாக்கமுடியாது. மனதானது ஒரு முறைப்படி பொருள்களைச் சரியாய் அமைத்து ஒப்பிட்டுப்பார்க்காவிடில் எண்ணின் கருத்துக்களை அமைத்துக்கொள்ளுதல் சாத்தியப்படமாட்டாது. இப்போது சார்ந்த எண்ணின் தாத்பரியத்தை அறிவிப்பது அதிக பயனை விளைவிக்கும். பொருள்கள், விவரணங்கள், அனுபோக விஷயங்கள் முதலியவற்றைக்கொண்டு தனி எண்ணறிவை பிரித்துக் காட்டும்போது, அவை சார்ந்த எண் ஆகும். மேலும் தனி எண் தெரிந்தவையாகவிருந்து, புதிதாயுள்ள தனி எண்ணைக் கணிக்க அதனை உபயோகிக்கும்போது அதுவும் சார்ந்த எண்ணாகிவிடக்கூடும். எந்தப் பருவத்திலும் சார்ந்த எண் முன்னால் கற்றறிந்துள்ள தனி எண்ணையும் குறித்து நிற்கும்.

(தொடரும்)

சிறுவர்களுக்கான கதைகள்

(V. M. Sammanasu)

2. குரங்கு விரதம்

ஒரு மலையடிவாரத்தில் ஒரு சிறு கிராமம். அதைச்சுற்றிலும் அடர்ந்த சோலைகள். அந்தச் சோலைகளில் அநேக குரங்குகள். அவை அடிக்கடி அந்தக் கிராமத்தினுள் சென்று, குழந்தைகள் கையிலுள்ள பண்டங்களைத் திடீரெனப் பாய்ந்து பறித்துச் சென்றுவிடும். அவற்றுள் சில நல்ல குரங்குகள். அவை, குழந்தைகளிடமிருந்து பண்டங்களைப் பறிப்பதில்லை. அதற்குப் பதிலாக, அவை குழந்தைகளின் முன்னால் நின்றுகொண்டு பலவகை ஆட்டமாடிக் குழந்தைகளுக்குப் பிரியமுண்டாக்கி, அவர்கள் இஷ்டப்பட்டுக் கீழே வீசியெறியும் பண்டங்களைப் பொறுக்கிக் கொண்டு ஓடிவிடும்

ஒருநாள் ஒரு சிறு குரங்கு முதன்முதலாக அந்தக் கிராமத்திற்குச் சென்றது. அன்று அமாவாசை தினம். வீடுகளெல்லாம் மெழுகப்பட்டு, முற்றங்களில் எல்லாம் கோலங்கள் இடப்பட்டிருந்தன. இதைப்பார்த்த குரங்கு ஆச்சரியமடைந்தது. எல்லாத் தெருக்களையும் சுற்றியபின் தெருக்கோடியில் ஓர் வீட்டண்டை நின்றது. அங்கே, ஒரு 'பாப்பா' நின்றுகொண்டிருந்தது. குரங்கு பாப்பாவைப் பார்த்து, "பாப்பா, பாப்பா, எனக்குப் பசியாயிருக்கிறது, ஏதாவது பண்டமிருந்தால் தரமாட்டாயா?" என்று கேட்டது. அதற்குப் பாப்பா, "ஐயோ பாவமே; இன்று அமாவாசையென்று உனக்குத் தெரியாதோ? நாங்களெல்லாம் விரதமாச்சே, நீ இன்று விரதமில்லையோ?" என்று அன்போடே சொன்னது.

இதைக்கேட்ட குரங்கு பாப்பாவைப்பார்த்து, "விரதம் என்றால் என்ன" என்று கேட்டது. பாப்பா, "விரதமென்றால், காலையிலே எல்லாம் ஒன்றும் சாப்பிடாமலிருந்து, மத்தியானத்துக்குமேலே, ஸ்நானஞ்செய்தபின் ஒரேவேளை ஆகாரம் சாப்பிட்டுவிட்டுச் சும்மா இருப்பது" என்றது.

குரங்கு: "ஓஹோ, அப்படியா. நானும் விரதம் இருக்கலாமோ?"

பாப்பா: "பேஷாய் இருக்கலாமே!"

உடனே குரங்கு பின்வருமாறு பாடிக்கொண்டே காட்டுக்குள் சென்றது.

‘மனுஷாளெல்லாம் சேர்வாளாம்,
தினுஷா விரதம் இருப்பாளாம்;
புதுஸா நாமும் சேர்வோமே,!
சொகுஸா விரதம் பிடிப்போமே!!’

இப்படிப் பாடிக்கொண்டே, தன் எதிரே வந்த பிராணிகளையெல்லாம் விரதமிருக்கும்படி அழைத்தது. அவை வரமாட்டோமென்றுவிட்டன. “யார்வந்தாலும் வராவிட்டாலும் நாம் விரதம் இருக்கவேண்டியதுதான். நாமும் மனுஷாளைப்போலேதானே இருக்கிறோம்; வால் ஒன்றுதானே அதிகம்; பார்க்கலாம்,” என்று குரங்கு விரதமிருக்க ஆரம்பித்தது.

அப்பொழுது காலை 8 மணி. குரங்கு பேசாமல் ஒரு மரக்கிளையில் இருந்து பார்த்தது. சலிப்பாக இருந்தது. மரத்துக்கு மரம், கிளைக்குக்கிளை தாவிப்பார்த்தது. களைப்படைந்தது; பசியும் அதிகரித்தது. அப்பொழுது, ஒரு கிளையில் நன்றாகப் பழுத்த ஒரு பழத்தைக் கண்டது. வாயில் ஜலம் ஊறிற்று. “நாம்தான் இன்று விரதமாச்சே,” என்று தன்னைத்தானே அடக்கிக்கொண்டது. ஆனாலும் ஆசை விடவில்லை; பசியும் பொறுக்கமுடியவில்லை. பார்த்தது குரங்கு. “அடடா, இந்தப் பழம் மரத்திலேயே இருந்தால், வேறு யாராவது பறித்துவிடுவார்கள். நாம் இதைப் பறித்துக் கையிலேயே வைத்துக்கொள்வோம், விரதம் விடும்பொழுது சாப்பிடலாம்,” என்று எண்ணிக்கொண்டு பழத்தைப் பறித்தது.

பறித்த பழத்தைக் கையிலே வைத்துக்கொண்டு அழகு பார்த்தது. ஆசையும் பசியும் அதிகமாயின. பிறகு, “நாம் இதைக் கையிலேயே வைத்திருந்தால் யாராவது வந்து பறித்துக் கொள்வார்கள், வாயினுள்ள நமது பையில் (குரங்குக்கு வாயிற் பை இருப்பதை ஞாபகப்படுத்தவும்.) வைத்துக்கொள்ளுவோம், என்று வாயில் அடக்கிக்கொண்டது. எத்தனைநாழிதான் வாயிற் பழத்தை வைத்துக்கொண்டு பசியைத் தாங்கிக்கொண்டிருப்பது? சற்றுநேரத்தில் பழத்தைக் கடித்து விழுங்கியது!

இந்தக் குரங்கைப்போலவே, சரியாக விரதமிராத பிள்ளைகளை, “நீ என்ன குரங்கு விரதமா” என்று கேலிசெய்யலாமல்லவா?

பதியம் போடுதலும் ஒட்டுவைத்தலும்

S. E. Arulraj, *Higher Grade.*

(கொத்து 31, மலர் 7, 217-ம் பக்கத்தின் தொடர்ச்சி).

பதியம்போட்டு வர்க்க விருத்தி செய்வதற்கு இயலாத செடிகள் அல்லது மரங்கள் விஷயமாய், ஒட்டுவைக்கும் முறையைக் கையாடலாம். உதாரணமாக, மாமரத்தில் ஒட்டுவைத்துக் கன்றுகள் இறக்குவதைப்பற்றிப் பார்ப்போம்.

ஒரு மாங்கொப்பைத் தெரிந்து எடுத்து அதைச்சுற்றி நான்கு அல்லது ஐந்து கொத்துகள் கத்தியால் கொத்திவிடவும். பிறகு அவ்விடத்தில், தாவரக்கழிவு செம்மண் இவற்றைச்சுற்றி வைத்து விழாதபடிகட்டி, மேலே சாக்குத்துணி போட்டுக்கட்டி விழுந்துவிடாதபடி பார்க்கவேண்டும். உதவிக்குப் பக்கத்தில் உறுதியான கம்பு ஒன்று ஊன்றியிருக்கலாம். அம்மண்ணிற்கு ஈரம் கொடுக்கும்படி, ஒரு சிறு துவாரம் உள்ள டம்ளரில் தண்ணீர் ஊற்றி ஒவ்வொரு சொட்டாக அவ்விடத்தில் விழும்படி அதற்குப் பக்கத்தில் கட்டிவிடவேண்டும். பின் சில நாள் ஆனதும் தயாரித்த செடிப் பாகத்தைச் சிறிது சிறிதாக வெட்டிக் குறித்த இடத்திற்குக் கொண்டுபோய் வைக்கவேண்டியதுதான்.

மற்றொருவிதம்: மண் குழாய் அல்லது மூங்கில் ஒன்று எடுத்து அதில் சமபாதியாய்ப் பிரித்துக்கொள்ளவேண்டியது. அதில் நிறைய மண் வைத்துக்கட்டி தினம் தண்ணீர்விடவேண்டும். ஒரு மாதத்திற்குப்பின் மரத்தின் பாகத்தைச் சிறிது சிறிதாய் வெட்டி, பின் தயாரித்த செடியைக் குறிப்பிட்ட இடத்தில் முளைக்கவைக்கவேண்டியது.

மற்றொருவிதம்: சிறு கம்பியால் கொப்பைக் கெட்டியாய் இறுகக் கட்டிப் பக்கத்தில் மண் நிறப்பி கட்டி வைத்திருந்தால் மண்ணில் வேர் செல்லும். கம்பியால் கட்டின பாகம் சிறுத்து ஒடியும். தினசரி தண்ணீர் கட்டிய இடத்தில் விடவேண்டியது.

மற்றொருவிதம்: எக்கொப்பைத் தேர்ந்தெடுக்கிறோமோ அக்கொப்பின் ஒரு இடத்தில் மேல் தோலைச் சுற்றி அறுத்துவிட்டு அவ்விடத்தில் மண் கட்டி செடி எடுப்பதும் உண்டு. மற்றொரு விதம்: லேசான கொப்பாக இருந்தால் அக்கொப்பை வளைத்து ஒரு முடிச்சுப்போட்டு அவ்விடத்தில் மண்போட்டு தண்ணீர்விடவேண்டியது. மண்ணும் தண்ணீரும் முக்கியம்.

குளிர்காலம் ஏற்றது. இவ்விதமாக மாமரத்திற்குமட்டுமல்ல நமக்குப் பலன்தரக்கூடிய வேறு மரம், செடிகளுக்கும் இப்படிச் செய்பலாம்.

குருத்து ஒட்டுதல்: இனி குருத்து ஒட்டுவைத்தலைப்பற்றிப் பார்ப்போம். ஒரு செடியிலுள்ள குருத்தை எடுத்து மற்றொரு செடிக்கு வைத்து வளர்ப்பதற்கு (Budding) குருத்து ஒட்டுவைத்தல் என்று பெயர். இது பழவர்க்கச் செடிகளுக்கும், காய்கனிச் செடிகளுக்கும் ஏற்றதாகும். நவம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரை ஷை ஒட்டுதல் செய்யலாம். தேர்ந்தெடுக்கும் குருத்து சரியானதாய் இருக்கவேண்டும். நாம் எடுத்த குருத்தானது காய்வதற்குள் வைத்துவிடவேண்டும். ஒட்டுவைக்கப் போகும் செடியும் நல்ல நிலைமையில் இருக்கவேண்டும். நாம் குருத்து எடுக்கும் கொப்பானது ஒரு வருஷத்திற்கு முன்னதாக உற்பத்தியான கொப்புகளிலிருந்து வந்துள்ள குருத்துகளை உற்பத்திசெய்யவேண்டும்.

ஒட்டுச்செய்யும் முறை: குருத்து எடுக்கும்போது கத்தியால் குருத்து உள்ள இடத்திற்கு $\frac{1}{2}''$-க்குமேல் சேர்த்து அறுக்க வேண்டும். 2 செடிகளிலும் ஒரேமாதிரியாக ஒரே அளவுடன் அறுத்திருக்கவேண்டும். அறுத்த குருத்தைப் பார்த்தால் அடிப்பாகத்தில் தண்டு தெரியும். அதைக் கத்தியால் தண்டுபாகத்தை எடுத்துவிடவேண்டும். ஒட்டவைக்கப்போகும் செடியைக் கத்தியால் இருபக்கமும் திறந்து அந்த இடத்தில் இக்குருத்தை வைத்துவிடவேண்டியது. குருத்துமட்டும் வெளியே இருக்க வேண்டும். குருத்து காய்ந்துபோகாதபடி நிழல்கொடுக்கவேண்டும். தண்ணீர் ஒரு சொட்டும் விடக்கூடாது.

இலந்தை, ஆப்பிள், பேரிக்காய் இவைபோன்ற மரங்களில் ஒட்டலாம். ஒரு நாளைக்கு 200 முதல் 300 குருத்துவரை ஒட்டலாம். நல்ல ஜாதி உற்பத்திக்கு இது ஒரு நல்ல வழி.

மற்றொருவிதம்: (Ring budding) செய்பலாம். தண்டைச்சுற்றி வளையமாகக் குருத்துடன் எடுத்து ஒட்டலாம். இப்படி ஒட்டுவதற்கு அநுபோகம் அதிகம் தேவையில்லை. ஒட்டு எடுக்கும் தண்டு பென்சல் பரிமாணமாவது இருக்கவேண்டும். செய்யும் வேலை மெதுவாக இருக்கவேண்டும். (Rafia thread) ரேபியா நூல் வைத்துக்கட்டி மெழுகினால் மூடலாம். அல்லது கோந்து 4 பாகம், தேன்மெழுகு 2 பாகம், கொழுப்பு வாஸ்லைன் 1 பாகம் முதலியவைகளைச் சேர்த்து கலந்து ஒட்டுக்கு உபயோகப்படுத்தும் மெழுகாக வைத்துக்கொள்ளலாம்.

ஒட்டுக்கு நல்ல களிமண்ணும் சாணியும் சேர்த்து உபயோகப்படுத்தலாம். செம்மண்ணும் உபயோகப்படும். நிழல் இருத்தல் மிகவும் நல்லது. 1 மாதம், 2 மாதத்திற்குள் காயம் ஆறிவிடும். ஒட்டினவுடன் கயிற்றை எடுத்துவிடவேண்டும். இப்படிச் செய்வதின் நோக்கம் யாதெனில்: நல்ல ஜாதி உற்பத்திசெய்வதற்கும், பழவர்க்கத்தில் நல்ல முறையில் லாபம் பெறவும் இம்மார்க்கம் நல்லதுதான். சில நாட்டில் வளராத செடியை அதே நாட்டில் வளர மற்ற செடியில் ஒட்டுச்சேர்க்கலாம். கெட்ட கன்றுகளைப் பிரயோஜனப்படுத்தலாம். பலவித வர்ணமுள்ள பூக்கள் ஒரு செடியில் இருப்பதால் அழகாக இருப்பதற்கும் உபயோகப்படுத்தலாம். திராக்ஷையிலும் ஒட்டுச்செய்யலாம்.

யோசனுவிருத்திச் செய்யுளின் விடை

(கொத்து 31, மலர் 7, 216-ம் பக்கம் பார்க்க.)

S. E. Arul Raj, H. 1. B.

ஐந்தெழுத்தைப் பொருளாக் கடுத்த குறை,
    நீக்குவோர் ‘ ஆசிரியர் ’ ஆவர் ;
ஐந்தில் ஆதியிரண்டைச் சேர்க்க,
    அரியதோர் வாழ்த்துதல் ‘ ஆசி ’ யாகும் ;
ஐந்திலாதியும் கடையிரண்டையும் நீக்க,
    ஆகும் புன்முறுவல் ‘ சிரி ’ ப்புமாகும் ;
ஐந்திலாதியும் கடையிரண்டையும் சேர்க்க,
    கழனியில் காவல்புரியும் ‘ ஆயர் ’ ஆவர்.
ஐந்திலாதிக் கடுத்தொன்றை நீக்கின்,
    ஆதியிலிந்தியாவிற்கு வந்த ‘ ஆரியர் ’ களாகும் ;
அறிவுடனே இவ்விடையதின் செய்யுளை விடுத்த,
    அன்பர் சூசை மாணிக்கத்திற்கு ;
அருள்ராஜ் அறைந்திட்டேன் விடையதனை,
    அன்பாய் இம் மலரினிலே.

குறிப்பு : செய்யுளின் விடையளித்த மற்றொருவர்,

M. Perianayagasamy, H. 2. A.

அறுவடை வண்டு சொன்ன கதை

(M. Antonimuthu, H. M., R. C. School, Reddiapatti.)

ஒருநாள் பள்ளிச் சிறுர்களில் அநேகர் தங்களுக்குக் கிடைத்த ரஜா நாளை வெகு உல்லாசமாகக் கழிப்போமென்று தங்கள் ஊரைவிட்டு வெளியே ஒரு மாஞ்சோலையின் வழியாகச் சென்றனர். அச்சோலையின் வனப்பையும் பக்ஷிகள் பாடும் பாட்டுக்களையும், மற்றும் பல கண்காக்ஷிகளையும் பார்த்து, கடைசியாகத் தங்கள் சிற்றுண்டியைப் புசிக்க ஒரு மாமரத்தின்கீழ் அமர்ந்து உணவருந்தினார்கள்.

பின், வாய் அலம்புவதற்காக ஒரு ஊற்றுக்குச் சென்றார்கள். அவர்களில் '**ஜோசப்**' என்னும் இளைஞன்மட்டும் ஆங்கு தங்கி, உணவைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். அப்பொழுது அம்மாமரத்தில் ஏதோ ஒரு வகையான சப்தம் கேட்டது. நம் இளைஞன் அச்சத்தத்தைக்கேட்டு திகைப்புற்று, நடுநடுக்கத் துடன் அம்மரத்தைச் சுற்றிச்சுற்றி சென்று தன் கண்களை உயர்த்தி மரத்தின் கிளைகளை உற்று நோக்கினான். அக்குரலொலி ஒரு வண்டின் குரல் ஒலிதான் என்று உற்றுக்கேட்க ஆரம்பித்தான். அப்பொழுது இப்பையனைக் காணுது பல இடங்களிலும் தேடி அலைந்து கடைசியாக அம்மாமரத்தை நாடி வந்தான் "செல்வராஜன்" என்பவன். அவ்விருவரையும் தன் குரலொலியால் நடுக்கச் செய்த அறுவடை வண்டானது, அவர்களிருவரையும் தன் சமீபம் வரும்படி அழைத்துத் தன் வரலாற்றை அவர்களுக்கு வெகு தெள்ளிய நடையில் அன்புடன் புகலலானது.

பிள்ளைகளே! இதோ பாருங்கள்! என் மேற்சட்டை. உங்கள் ஆசிரியர் உங்களுக்குப் போதித்திருக்கிறபடி, இதை ஒரு வகையான ஓடு என்பார்கள். இதற்குள்ளாகவேதான் நானிருந்து வசிக்கிறேன். என்னைப் பலர் **அறுப்புக்கால வண்டு** என்றும் இன்னும் சிலர் **வெட்டுக்கிளி**யென்றும் நவில்வார்கள். அப்பெயர் கொண்டு யாராவது என்னை அழைத்தால் நான் அவர்களை இலேசில்விடேன். மேலும், வெட்டுக்கிளிகள் செய்யும் விஷமத்தனமும் துஷ்டத்தனமும் நீங்கள் நன்முய் அறிவீர்களல்லவோ! வெட்டுக்கிளிகள் கூட்டங்கூட்டமாயும், ஜோடி ஜோடியாகவும் வந்து தம் தம் இஷ்டம்போல் தம் தம் கண்ணில் காணும் பயிர் பச்சைகளை எல்லாம் கடித்துத் தின்றுவிடும். நானே அப்படி ஒருபொழுதும் செய்வதில்லை. நான் உங்கள் பயிர் பச்சைகளை அழிப்பது இல்லை. வேனிற்காலத்தில் சோலைகளில் அமர்ந்து சதா கீர்த்தனம் பாடுவேன். என் சிநேகிதர்

களுக்கு அந்தப் பாட்டு இன்பமாயிருக்கும். உங்கள் இருவருக்கும் என் கீர்த்தனை இன்பமாக இருந்ததினாலேயன்றோ என்னை நாடி கண்பமாய் என்னை அண்டினீர்கள்.

சுமார் ஒரு வருஷத்திற்குமுன் என் தாயார் ஒரு மரக்கிளையில் அநேக முட்டைகள் இட்டாள். சில வாரங்களுக்குள் நான் ஒரு முட்டையிலிருந்து வெளிப்பட்டு ஒரு சிற்றெறும்புபோல் இருந்தேன். அப்பொழுது பூமிக்குள் வீடு கட்டிக்கொண்டு வசிக்கவேண்டும் என்று எனக்குத் தோன்றியது. என் செய்வேன்? நான் இருப்பது மரக்கிளை. மரத்திலிருந்து எப்படி மண்ணுக்குப் போவது? மரத்தின் மேலிருந்து அடிப்பாகத்திற்குத் தவழ்ந்துபோக, மிகவும் அஞ்சிக்கொண்டிருந்தேன். யாராவது நம்மை வந்து பிடித்துக்கொண்டால் என் செய்வதென்று, திருடனைப்போல் விழித்தேன். ஆனாலும் அச்சமயம் எனக்கு ஒரு யுக்தி தோன்றலானது. நானிருந்த இடத்தைவிட்டு மெல்ல மெல்ல நான் இருந்த கிளையின் உச்சிக்கு நகர்ந்து சென்று மளார் என்று கீழே தாவினேன்.

அதனால் எனக்கு ஊமைக்காயமென்கிலும் ஏற்படவில்லை. கீழே வந்ததும் வளை தோண்டிக்கொண்டு பூமிக்குள் புகுந்தேன். அப்பொழுதும் எனக்கு சிராய்த்த காயமும் ஏற்படவில்லை. வசிப்பதற்கு வசதியான இடம் கிட்டினால் போதும். எதாகிலும் ஒரு சாண் கும்பிக்கு தீனி வேணுமே? அதற்காக அங்குமிங்கும் ஓடி பரவியுள்ள மர வேர்களைத் தின்றேன். அப்போது நான் ஒரு விகாரமான வண்டு ரூப தசையை அடைந்தேன். பிறகு வர, வர, வளர்ச்சியடைந்தேன். பிறகுதான் எனக்கு மேற்போர்வையாக இந்த ஓடும் ஏற்பட்டது. இந்த ஓட்டைத் தொட்டு உங்கள் உபாத்தியாயர் கற்பித்தபடி எவ்வளவு உறுதியாயிருக்கிறதென்று உற்றுநோக்குங்கள். இவ்வாறு என் வாழ்நாள் கழிந்துவருகையில் சில வாரங்களுக்குமுன் என் வாழ்நாளில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. யாரோ ஒருவர் என்னை நோக்கி பூமிக்கு மேல் நடக்கும் கண்காக்ஷிகளைக் காணும்படி என் செவியில் இறைந்ததுபோல் எனக்கு சப்தித்தது. நான் பரமானந்தத்தில் மூழ்கி பூமியைக் கோபத்துடன் பிளந்து (புழைசெய்து) மெல்ல மெல்ல நகர்ந்து மரக்கிளைமேல் ஏறி என் கால்களால் அக்கிளைகளைப் பற்றிக்கொண்டு உச்சிக் கொப்புக்குச் சென்று அங்கு அமைதியுடனிருக்கையில் ஓர் விசேஷமானதும் நூதனமானதுமான ஓர் நிகழ்ச்சி என்னை அறியாமலே என் உடலில் ஏற்படலானது. அஃதேதெனில் என் மேல் வீடானது இரண்டாக வரிவிட்டு

வெடித்தது. வெடிக்க ஆரம்பித்தவுடன் நான் மயிர் சிலிர்த்து உடல் நடுங்கி முகம் ஒடுங்கி இனி யாது நடக்குமோ எல்லாம் அன்னவர் செயல் என்று என் உடலைக் குறுக்கித் தலையை வெளியே நீட்டினேன். பிறகுதான் பாலன்முன், வானலோக தூதர் தோன்றினதுபோல் அற்புதமாக எனக்கு நான்கு இறக்கைகள் தோன்றலாயின. என்னே மிருது! என்னே அழகு ரூபலாவண்யம்! என்னே நிறங்களின் வனப்பு! என்பதை யார் செப்பக்கூடும்! பின் கால்களை வெளியே இழுத்தேன். உடல் முழுவதையும் ஓட்டிலிருந்து விடுவித்துக்கொண்டேன். பிறகு என் அவயவங்கள் முழு வளர்ச்சியடைந்து உறுதியடையத் தலைப்பட்டன. பாலர்காள், கடைசியாக இப்பொழுது ஏற்பட்டுள்ள உருவத்தை அடைந்தேன். இப்பொழுது எனக்கு கூண்டினுள் அடைபட்டிர சிறிதளவேனும் சம்மதமில்லை. என் இஷ்டம்போல் எங்கும் பறந்துசென்றேன். பூமியுள் புதையுண்டிருந்தால் நான் எப்படி கண்காக்ஷிகளைக் காண்பது? இப்பொழுது எனக்குக் கிடைத்த நன்மைகளுக்குக் காரணம் என் முன்னோர்கள் செய்த புண்யப்பேறுகளின் பலன் அன்றோ? அச்சந்தோஷத்தினால்தான் இம்மாபெரும் பூஞ்சோலையில் சதா கீர்த்தனங்கள் பாடி, அப்பாக்களை மாலையாகச் சேர்த்து சர்வ வல்லப கடவுளுக்கு சாற்றுகின்றேன்.

நம் பள்ளிச் சிறுர்கள் மிகவும் ஆனந்தம்கொண்டு தன் நண்பனுக்கு (வண்டுக்கு) முகஸ்துதி கூறி தத்தம் இல்லங்களுக்கேகி, தாம் கண்டவற்றையும் கேட்டவற்றையும் மற்றும் பல நண்பர்களுக்குச் சொல்லி பரமானந்தமடைந்தார்கள். ஆசிரியர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவுண்டோ! உல்லாசப் பிரயாணத்தின் பயன், பயனன்றோ!

(முத்துக்கண்ணு, உபாத்தியாயர் வீட்டிற்குள் வந்து)

முத்துக்கண்ணு: சார்; இன்னைக்கி நான் பள்ளிக்கூடத்திற்கு வரமுடியாது.

உபாத்தியாயர்: ஏண்டா; காரணம் என்ன?

முத்துக்.: எனக்கு வயிற்றைவலிக்கிறதாம்; வீட்டிலிருந்து பிள்ளையை வைத்துக்கொள்ளவாம். ஆமா சார்—அம்மா அப்படித்தான் சொல்லச்சொன்னுங்க......பொய் இல்லை சார்.......

S. E. Arul Raj, H.I.B.

நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

3—1—41 இன்று, கிறிஸ்துமஸ் விடுமுறைக்குப்பின் மீண்டு வகுப்புகள் தொடங்கலாயின.

10—1—41 சாரணியத்தைத் துவக்கி அதன் பிரதம தலைவராக விளங்கி வந்த காலஞ்சென்ற லார்டு பேடன் பவல் அவர்கள் (7—1—41-ல்) காலவியோகமானதையுன்னி, இன்று மாலை எமது பாடசாலைச் சாரணர்களும் (Scouts) திரி சாரணர்களும் (Rovers) ஸ்கௌட் மாஸ்டர் ஸ்ரீ A. D. M. பிரகாசம், B.A.,L.T. அவர்களின் தலைமையின்கீழ் அனுதாபக்கூட்டம் கூடினர். பேடன் பவல் பிரபு அவர்கள் சாரணியத்தைக்கொண்டு, உலகுக்குப்புரிந்த அரியபெரிய சேவைகளைப்பற்றிப் புகழ்ந்து பேசியபின், அவரது மரண அனுதாபப் பாட்டைப் பாடியதுடன் கூட்டம் கலைந்தது. அப்பாடலை மற்றோரிடத்திற் காண்க.

21-1-41 & 22-1-41 : இத்தேதிகளில், சென்னை தேகப்பயிற்சிக் கல்வித் தலைவர் (Senior Physical Director) Dr. G. F. Andrews அவர்கள் நமது பாடசாலையைப் பார்வையிட்டனர். தேகப் பயிற்சி ஏற்பாடுகளில் நம் பாடசாலை ஏனைய பாடசாலைகளைவிட வெகுவாய் முன்னேறியிருப்பதைப்பற்றிப் புகழ்ந்து கூறியதோடு, 21—1—41 மாலை எமது பாடசாலை மாணவர்கட்கும், ஸர்க்கார் போதனமுறைப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் பயன் படும்படியாக, எமது பாடசாலை சபாமண்டபத்தில் தேகாப்பியாசப் பயிற்சிகளைக் கற்றுக்கொடுப்பதைப்பற்றி அரியதோர் பிரசங்கமும் புரிந்தனர். அவ்வமயம், அங்கு கூடியிருந்த ஸர்க்கார் போதனமுறைப் பாடசாலை தலைமையாசிரியர், உதவியாசிரியர்கள், மாணவர்கள் ஏனையோரனைவர்க்கும் எம் பாடசாலைத் தலைமையாசிரியர் சங். லூர்துஸ்வாமி அவர்கள் நன்றிகூறவே, கூட்டம் இனிது நிறைவெய்தியது.

23—1—41 எம் பாடசாலைச் சாரணர்களும், திரி சாரணர்களும் உல்லாசப் பிரயாணமாக திருவானைக்காவலுக்குச் சமீபம் காவிரியாற்றின் கரையை யொட்டியிருக்கும் சோலையைக் குறித்துச்சென்று, சாரணீய வேலைகளில் ஈடுபட்டனர். அதில் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கது, அவர்கள் தாமாகவே செய்த சமையல் வேலையே. சமையல் வெகு சுவையுடன் பக்குவமடைந்து, கைதேர்ந்த சமையற்காரரது உண்டிபோல் விளங்கினது மெச்சற்பாலதே. போஜனத்திற்குப்பின் ஆடல்பாடலும் இறுதியில் "விழாத்தீயும்" (Camp-fire) அனைவர்க்கும் இன்பமளித்தது. மாலை 7-மணிக்கு எல்லோரும் வீடு திரும்பினர்.

27—1—41 இன்று மாலை 5 மணிக்கு எம் பாடசாலைத் தலைமையாசிரியர் சங். A. லூர்துஸ்வாமி, B.A., L.T. அவர்களது தலைமையின் கீழ் நம் பாடசாலை "பழைய மாணவர் கூட்டம்" நடைபெற்றது. அடுத்த மாதத்தில் நாம் கொண்டாடவிருக்கும் வருஷாந்திர பழைய மாணவர் தினத்தை எவ்வண்ணம் சிறப்பாய் நடத்துவது என்பது

போன்ற விஷயங்களைப்பற்றித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. விவரம் மற்ருேரிடத்திற் காண்க.

29—1—41 நமது பாடசாலைக் குருளைகள் (Cubs) இன்று ஸ்ரீ ஞுசைமாணிக்கம் அவர்களது தலைமையில் கருமண்டபத்திற்கு காலை 9 மணிக்கு உல்லாசப் பிரயாணஞ்சென்று கப் விளையாட்டுக்களை நடத்தியபின் 12 மணிக்குப் பாடசாலைக்குத் திரும்பினர்.

30—1—41 இன்று எம் பாடசாலை ஜூனியர் மாணவர்கள் வெளிப்பாடசாலைகளுக்குப் போதனுப் பயிற்சியின் பொருட்டு வழக்கம்போல் அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஸீனியர் மாணவர்களை திருச்சி நகர்க்கு அப்பால் சுமார் 4 மைல் தூரத்திலுள்ள பருத்தி-நூல் நூற்கும் இயந்திரசாலைக்கு (The Trichinopoly Cotton Mills) அந்தந்த ஆசிரியர்கள் அழைத்துச்சென்று, அங்கு பருத்தியிலிருந்து இயந்திரங்களின் உதவியால் நூல் நூற்கப்படும் விமரிசைகளை விளக்கிக்காட்டி அனைவரையும் மகிழ்வித்தனர்.

பழைய மாணவர் தினக்கொண்டாட்டம்

அன்புள்ள ஐயா,

நம் பழைய மாணவர் தினக்கொண்டாட்டமானது இவ்வருஷம் மார்ச்சு மாதம் 3-ம் தேதி (3-3-41) திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும். அவ்வமயம் தாங்கள் தவறுமல் விஜயஞ்செய்து வைபவத்தைச் சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

R. Pitchai, காரியதரிசி.

பழைய மாணவர் தினக்கொண்டாட்டச் சம்பந்தமாக 27-1-41 திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நம் பழைய மாணவர் பொதுக்கூட்டமொன்று தாய்பாடசாலையில் கூடிற்று. அவ்வமயம் தலைவர் ஸ்ரீ. A. Lourdusamy B.A.,L.T. அவர்கள் தலைமை வகித்தனர். கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :—

(1) **பழைய மாணவர் தினம் :**—3-3-41 திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு தாய்பாடசாலையில் நடைபெறும்.

(2) **பழைய மாணவர் தினக்கூட்டம் :**—பழைய மாணவர் தினத்தன்று "பழைய மாணவர் வருஷாந்தரப் பொதுக்கூட்டம்" ஒன்று வெகு சிறப்பாய் நடைபெறும்.

(3) **பழைய மாணவர்தின வைபவம் :**—பழைய மாணவர் யாவருக்கும் சிறந்த சிற்றுண்டி வழங்குதல், சொற்பொழிவாற்றல், பிரிவு உபசாரம் முதலியன நிகழ்த்துதல், சங்கீத கோஷ்டி முதலியவற்றைக்

கொண்டு வைபவத்தைக் கூடிய வரையில் வெகு சிறப்பாய்க் கொண்டாடலாம்.

பின்னர், தலைவரவர்கள் பூங்கொத்தின் மணத்தைப்பரப்ப ஒவ்வொருவரும் மென்மேலும் பிரயாசப்படவும், சங்கத்திற்கு அவரவர் கொடுப்பதாக வாக்களித்த தொகையைக் கொடுக்கவும் முன் வருமாறு தூண்டினர்கள். இறுதியில் தலைவரவர்களுக்கும், கூடியிருந்தோருக்கும் காரியதரிசியவர்களால் வந்தனங் கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

ஓர் விண்ணப்பம்

நமது பழைய மாணவர்களிற் பலர் இன்னும் நமது சங்கத்தின் அங்கத்தினர்களாகச் சேராமல் வாளாவிருக்கின்றனர். ஆகவே இத்தாய்ப் பாடசாலையைப்பற்றி நினைப்பூட்டுவது உங்களது முக்கிய கடமை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இன்னும் அநேக அங்கத்தினர் தாய்ப்பாடசாலையைவிட்டு வெளியேகுங்காலத்து, சங்கத்திற்கென நன்கொடையாகவோ, அல்லது ஆயுள் அங்கத்தினராக வேண்டுமென்ற நோக்கத்துடனே ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்துவதாக வாக்களித்துள்ளார்கள். ஆகவே நண்பர்கள் அவரவர் தங்களது பாக்கித் தொகையை கூடிய சீக்கிரம் செலுத்தி சங்கத்தை ஆதரிக்குமாறு வெகுவாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். பற்பல ஜில்லாக்களுக்குப் பிரதிநிதிகளாகச் சென்றிருக்கும் காரியக் கமிட்டி அங்கத்தினர்களே உங்கள் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்ட இச்சங்க வேலையை ஆர்வத்தோடு செய்ய முன்வாருங்கள். புதிய அங்கத்தினர்களையும், பரிபாலகர்களையும், ஆயுள் அங்கத்தினர்களையும் உபகாரிகளையும் நமது சங்கத்தில் சேர்க்க மறவாதீர்கள். நமது சங்கம் தழைத்தோங்குவதற்கு உங்களது உதவியும், ஒத்துழைப்பும் அத்தியாவசியமென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். சமீபத்து வரும் பழைய மாணவர் தின வைபவத்திற்கு உங்கள் எல்லோரையும் எதிர்பார்க்கும்,

R. PITCHAI, காரியதரிசி.

தூரிபுஷ்ட புட்பால் டீம் ஆரம்பவிழா (தூத்துக்குடி)

லோக மாதா சங்கத்தில் 12—1—41 ஞாயிறு மாலை போதனு விஷயப் பூங்கொத்து பத்திராதிபரும் திருச்சி போதனு முறை பாடசாலை தலைமையாசிரியருமான “சங். A. லூர்து சுவாமிகள், B.A., L.T. புட்பால் டீம்” தூரிபுஷ்ட தலைவரால் ஆரம்பிக்கப்பட்டது. பலர் சுவாமிகளைப்பற்றி பேசினர். சுவாமிகள் படஊர்வலம் வந்தது. ஞாபகமாக சகலருக்கும் சுவாமிகள் படம் வழங்கப்பட்டது.

பேடன் பௌவல் பிரபு மரணமும் சாரணர் துயரமும்

(B. Thomas Victor, *Music Teacher, R. C. Training School, Trichy.*)

56. நோட் மெட்டு. கன்னிகள் ஏகதாளம் திச்ரகதி.

"ஆருயிரே" என்ற மெட்டு.

ஸ		ரி	க			ம	ப	த		நி	

ப ஸ ரி கா க ரி ஸ ரி பா, || ப ம ப தா த ப ப ம பா,
ஆறுதில்லை.இம் மாதுய ரம். || மண்ணில் பேடன்பௌ வல்மர ணம்.
ப ம க ரி ஸ ரி ம க ரி ஸா, ||
திருமோ பூவினி லித்தரு ணம். ||

2. தாரணியில் தவித்தழுகும் சாரணியோ ரெம்மை மறந்து
காருண்ய தேவன் பாதம் சேர்ந்தீரோ.
3. நன்மரண பொன்சாசனமாய் நட்பை நிலைநாட்டிவைத்த
கண்ய மகானே பரம் சேர்ந்தீரோ.
4. ஜீவகாருண்ய சிந்தையதை மைந்தருளம் மறந்திடாது
தீவித்துரைத் தித்தரை நீத்தீரோ.
5. சகோதரத்வம் பூவில்வாழ புரிந்த மகானுயிர் துறந்தார்
சோகமுறும் மக்களை விடுத்து.
6. விண்ணிலவர் நிர்மலசுகம் பெற்றுய்திட பரனை நிதம்
மண்ணுளோர் போற்றிட வாரும் வாரும்.

ரெவினியு டிபார்ட்மெண்ட்

அதிகாரம் பெற்றிராத நபர்கள் வியாபார வரிகளை வசூலிப்பது சம்பந்தமாய்ச் செய்யப்படும் எச்சரிக்கை

சமாச்சாரப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் 66-ம் ந. அறிக்கை

போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ், 1940-ம் ஹு ஸெப்டம்பர்-மீ 2-உ

சில நபர்கள் வியாபாரவரி இலாகா உத்தியோகஸ்தர்களைப்போல் நடித்து, சில்லரைப் புகையிலை வியாபாரிகளிடமிருந்து பணம் வசூலித்து, அந்தப்படி வசூலித்த தொகைகளைத் தாங்களே உபயோகித்துக்கொண்டிருக்கிறார்களென்று கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த நபர்கள் பார்வையிடும் வரி உத்தியோகஸ்தர்கள், பரிசோதனை செய்யும் உத்தியோகஸ்தர்கள், புகையிலை உத்தியோகஸ்தர்கள் அல்லது லைசென்ஸ் கொடுக்கும் இன்ஸ்பெக்டர்கள் என்றெல்லாம் தங்களைச் சொல்லிக்கொண்டு, எழுதப் படிக்கத் தெரியாதவர்களும் விஷயமறியாதவர்களுமான ஜனங்களா

18457
00 063

கப் பார்த்து மோசம் செய்திருக்கிறார்களென்றும், வரியையும் லைஸென்ஸ் கட்டணத்தையும், சரியான காலத்தில் லைஸென்ஸுகள் பெற்றுக்கொள்ளாததற்காக அபராதங்களையுங்கூட அவர்களிடமிருந்து வசூலித்திருக்கிறார்களென்றும் புகார் செய்யப்பட்டிருக்கிறது. பொது விற்பனை வரியைக்குறித்த 1939-ம் வருஷத்திய சென்னபட்டணத்து ஆக்டின்படியும் புகையிலையை (விற்பனை செய்வதற்கு வரி விதிப்பதையும் லைஸென்ஸ் கொடுப்பதையும்) குறித்த 1939-ம் வருஷத்திய சென்னபட்டணத்து ஆக்டின்படியும் லைஸென்ஸ் பெற்றிருக்கும் சகலமானவர்களுக்கும் வரி விதிக்கப்பெற்றிருக்கும் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால்,—மேற்சொன்ன பெயர்களையுடைய உத்தியோகஸ்தர்கள் எவரும் இல்லை. வரி விதிப்பதற்கும் லைஸென்ஸுகள் கொடுப்பதற்கும் அதிகாரம் பெற்றிருக்கும் உத்தியோகஸ்தர்கள் டெப்யுடி வியாபார வரி உத்தியோகஸ்தர்கள், அஸிஸ்டன்ட் வியாபார வரி உத்தியோகஸ்தர்கள் என்னும் இவர்கள்தாம். இவர்கள் தாசில்தாரர்கள், டெப்யுடி தாசில்தாரர்கள் ஆகிய இவர்களின் அந்தஸ்து உள்ளவர்கள். வரிகளையும் லைஸென்ஸ் கட்டணங்களையும் ரொக்கமாகச் செலுத்துகையில் அவைகளை ஒரு கஜானாவில் செலுத்தினாலொழிய மற்ற விஷயங்களில், பிரஸ்தாப வியாபாரி எந்த கிராமத்தில் வசிக்கிறாரோ அந்த கிராமத்தின் பெரியதனக்காரரிடமாவது, பில் கலெக்டர்கள் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கும் இடங்களில் வியாபாரவரி இலாகாவின் பில் கலெக்டரிடமாவது மாத்திரமே அவைகளைச் செலுத்த வேண்டுமென்றும், அப்படிச் செலுத்தப்பட்ட ஒவ்வொரு தொகைக்காகவும் ரசீதுகள் பெற்றுக்கொள்ளவேண்டுமென்றும் அவர்களுக்கு எச்சரிக்கை செய்யப்படுகிறது. எந்த பில் கலெக்டரிடமாவது வரி அல்லது லைஸென்ஸ் கட்டணத்தைச் செலுத்துகையில் வியாபாரவரிக் கமிஷனரும் பிரஸ்தாப ஜில்லாவின் வியாபாரவரி உத்தியோகஸ்தரும் கையெழுத்து செய்துள்ள சிவப்பு அதிகாரச்சீட்டு அட்டையொன்றை அவர் வைத்திருக்கிறாரா வென்று அவர்கள் சந்தேகமறத் தெரிந்து கொள்ளவேண்டும். பிரஸ்தாப இலாகாவின் நிர்வாக உத்தியோகஸ்தர்கள் எந்தக் காரணத்தை முன்னிட்டும் அபராதங்கள் விதித்து வாங்க அவர்களுக்கு அதிகாரமில்லை. ஆகையால், அபராதம் செலுத்தும்படிக் கேட்கும் யாதொரு நபரை மோசக்காரரென்று கருதவேண்டும். அது சங்கதியை கிராமப் பெரியதனக்காரருக்காவது, போலீஸாருக்காவது உடனே தெரிவிக்கவேண்டும். லைஸென்ஸ்தாரர்களும் வரி விதிக்கப்பெறுகிறவர்களும் மேற்சொன்ன சாதாரண விஷயங்களைத் தங்களுடைய சொந்த நன்மையை முன்னிட்டு ஜாக்கிரதையாய் அனுசரித்து, குற்றம் செய்ய எண்ணியிருப்பவர்கள் விஷயமாய்த் தக்க நடவடிக்கை நடத்த கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்களுக்கு உதவி செய்வார்களென்று கவர்ன்மென்டார் நம்புகிறார்கள்.

பி. ஜி. ஹோல்ட்ஸ்வோர்த்,
கவர்ன்மென்ட் ஸெக்ரெடரி.

SUPERIOR

School Chalk Crayons!



BUY INDIAN ! BEST QUALITY, DURABLE

SUPPORT INDIAN INDUSTRY ! SMOOTH & STRONG ! !

THE STANDARD CHALK CO.,

Old Post Office Road,

CANTONMENT, TRICHINOPOLY.

Suppliers of

White & Coloured Chalk Crayons.

PATRONISED BY
MANY HIGH SCHOOLS, COLLEGES
AND PUBLIC INSTITUTIONS.

A trial order will convince you.

Patronise Indian Industry.

எலிமெண்டரி பாடசாலைகளுக்கு ஏற்ற சங்கீத பாட புத்தகங்கள்.

---

1. பாலசங்கீத வாசகம்

முதல் 3 வகுப்பு மாணவர்களுக்கு ... 0—4—6

2. பாலசங்கீத வாசகம்

ஆசிரியர்களுக்கு ... 0—6—6

3. கர்னாடக சங்கீத போதினி

(முதல்பாகம்) ஆசிரியர்களுக்கு ... 0—6—0

4. கர்னாடக சங்கீத போதினி (2-ம் பாகம்)

1 முதல் 5 வகுப்பு கிறிஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0

5. கர்னாடக சங்கீத போதினி (3-ம் பாகம்)

6 முதல் 8 வகுப்பு கிறிஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0

விலாசம் : **A. GNANADICKAM,**
South Indian Music School,
St. Thomas Church Rd.,
OOTACAMUND.

எமது "போதனாவிஷயப் பூங்கொத்து" பத்திரிகை ஏற்கனவே இல்லாத இடங்களிலும், ஆசிரியர் சங்கங்களிலும் விற்பனைசெய்ய ஏஜெண்டுகள் தேவை. கமிஷன் தாராளம். விபரத்திற்கு பத்திராதிபருக்கு எழுதவும்.

பத்திராதிபர்.

பெண்கள் போதனாமுறைப் பாடசாலை

தென்னாற்காடு ஜில்லா, கடலூர், புதுப்பாளையத்திலிருக்கும் அர்ச். சூசையப்பர் பெண்கள் போதனாமுறைப் பாடசாலையில் 1941-ம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து ஆசிரிய பயிற்சி (Higher Grade Training) பெற விரும்பும் மாணவிகள் 1941-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ம் தேதிக்குள் மனுசெய்துகொள்ளவேண்டும். அதற்குப் பின் அனுப்பப்படும் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. தகுதியுடைய மாணவிகளுக்குச் சர்க்கார் உபகாரச் சம்பளம் மாதம் ரூ. 8 அளிக்கப்படும். முழு விவரங்கட்கு மூன்று அணா தபால் தலையுடன் (3 as. stamps) கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

The Correspondent,
St. Joseph's Hr. Ely. Training School
For Women,
Pudupalayam, **Cuddalore, N. T.**

சிறுவர் அறிவுக் கதிர்

ESTD 1935

CHILDREN'S MAGAZINE

சிறுவர்களுக்கேற்ற சிறந்த மாதப் பத்திரிகை
வருட சந்தா உள்நாடு 12 அணா வெளிநாடு 1½ ரூ
டிபாஸிட் கட்டும் ஏஜண்டுகள் எங்கும் தேவை
சிறுவர் அறிவுக்கதிர் ஆபீஸ் ஈரோடு, S.I.RY.

"ஆரம்பக்கல்வி"

சுமார் 5 வருட காலமாக ஆரம்ப ஆசிரியர்களின் முன்னேற்றத்துக்கு உழைத்துவரும் ஓர் மாதாந்தரப் பத்திரிகை.

இதில் பாடசாலைகள் சம்பந்தமான அரசாங்க உத்தரவுகள், டைரெக்டர் சுற்றறிக்கைகள், கெஜட்டில் பிரசுரமாகும் கல்வி சம்பந்தமான செய்திகள், ஆசிரியர்களுக்கு மிக்க உபயோகமான பொதுச் செய்திகள், கட்டுரைகள் வெளிவரும்.

வருட சந்தா ரூ. 1—0—0. மாதிரிப் பிரதி இனாம்.

ஆரம்பக்கல்வி ஆபீஸ், 94, 95, புதுத்தெரு, மண்ணடி, மதராஸ்.

Reg. No. M. 1354.

THOMAS SPORTS

[Pro: I. PONNIAH PILLAI]

CLIVE'S HOUSE, TEPPAKULAM P. O.,

TRICHINOPOLY

OFFICIAL STOCKISTS FOR

SLAZENGER'S Ltd.

LONDON.

The CHEAPEST HOUSE FOR

Spalding Australian Dunlop
American Fulcrum & Japan

TENNIS FRAMES

WE UNDERTAKE

RE-STRINGING REPAIRING
RE-SHAPING & REGLUEING

WE MANUFACTURE THE BEST & GUARANTEED

NETS, BADMINTON BALLS IN ANY COLOUR IN ANY WEIGHT

A TRIAL IS SOLICITED

Your best Selection may be made at our Show Room.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Superintendent, St. Joseph's Industrial School Press, Trichinopoly.